Lifeline

மீண்டும் வாழ்வோம்

இடம்பெயர்ந்த மக்களுக்கான மனிதாபிமான தகவல் பரிமாற்றம்

Humanitarian Information For IDPs

Vol 1 - No6 Pages 4 Sunday, 30 March 2008 Free Copy

இடம்பெயர்ந்த மக்களுக்கான மனிதாபிமான பணிகளில் மத அமைப்புகளின் பங்கு

மட்டக்களப்பு மாவட்டத்தில் உள்நாட்டு பிரச்சினைகள் காரணமாக இடம்பெயர்ந்த மக்களுக்கு சமய நிறுவனங்கள் ஊடாக எவ்வாறான உதவிகள் வழங்கப்படுகின்றது என்பது தொடர்பில் கண்டறியும் நோக்கில் மட் டக்களப்பு மாவட்டத்தில் உள்ள சமயத் தலைவர்கள் சிலரை மீண்டும் வாழ்வோம் குழுவினர் சந்தித்தனர்.

மட்டக்களப்பு கோட்டை முனை வீரகத்தி பிள்ளையார் ஆலய சிவாச்சாரியார் சிவகுமார் குருக்களுடன் கலந்துரையாடியபோது அவர் அசாதாரண சூழ் நிலைகளால் பாதிக்கப் பட்டு மன அழுத்தங்க ளுக்கு உள்ளாகி இருந் தவர்களுக்கு சமய ரீதி யான பயிற்சிகள் வழங் கப்பட்டதாக கூறினார். அண்மையில் இடம் பெற்ற அசம்பாவிதங் கள் காரணமாக இடம் பெயர்ந்த மக்களுக்கு சமைத்த உணவுகள் மற்றும் உலர் உணவுகள் போன்றவற்றை வழங்கியதாகவும் அவர் குறிப்பிட்டார்.

மட்டக்களப்பு மாவட்டத்தில் உள்ள மஞ்சத் தொடுவாய் அகதிமுகாம்

தமது சொந்த இடங்களில் மீளக் குடியே றாத மக்களை மிக விரைவில் அவர்களு டைய சொந்த இடங்களில் மீள் குடியேற்று வதற்காக ஒழுங்குகளை மேற்கொள்ளு மாறு சில அதிகாரிகளுடன் கலந்துரையா டியதாகவும் அவர் கூறினார்.

காத்தான் குடி முஸ்லிம் சம்மேளனத்தின் செயலாளர் அப்துல் அதீக் மொஹமட் சத்தீக் தமது செயற்பாடுகள் குறித்து கருத்து தெரி விக்கையில் திடீரென இடம்பெயர்ந்த மக்க ளுக்குத் தேவையான உணவு உடை தற்கா லிக இருப்பிடங்களை வழங்குவதற்கு கமார் 20 இலட்ச ரூபாயை செலவிட்டதாக கூறினார். கொக்கட்டிச்சோலையில் இருந்து இடம்பெயர்ந்த மக்களில் 15 000 பேருக்கு 5 நாட்கள் உணவு வழங்கியதாக கூறினார்.

இடம்பெயர்ந்த மக்களின் அடிப்படைத் தேவைகளை பூர்த்தி செய்து சம்மேளனத் திற்கு சொந்தமான காணியில் அவர்களை குடியமர்த்தியதாகவும் அவர் குறிப்பிட் டார்.

இதேவேளை மட்டக்களப்பு மாவட்டத் தில் அமைந்துள்ள ஒரே ஒரு பௌத்த விகா ரையான மங்களராமையில் உள்ள ஹம்பிட் டிய கமலாட்ன தேரோவுடன் உரையாடும் போது தன்னை நாடி வந்தவர்களுக்கு சமைத்த உணவுகளை வழங்கியதுடன் சிறு வர்களுக்கு தேவையான பாடசாலை உபகர ணங்களையும் வழங்கியதாக கூறினார்.

கடந்த காலத்தில் மிகத் துயரத்திற்குரிய சுனாமி அனர்த்தம் நிகழ்ந்தபோது மட்டக் களப்பில் உள்ள பெரும் எண்ணிக்கையி னான மக்கள் தன்னிடம் வந்து உதவி கோரி யதாகவும் அந்த சந்தர்ப்பத்தில் அவர்க ளுக்கு உணவாக கொடுக்க எதுவும் தன்னி டம் இருக்கவில்லை என்றும், எனினும் சுனாமி அலைகளினால் அடித்து வரப்பட்ட மரக்கறிகளை கேசரிக்து அவர்களுக்கு சமைத்து சாப்பிடக் கொடுத்ததாகவும் அவர் கூறினார்.

அன்மைக்கால அசம்பாவிதங்களால் இடம்பெயர்ந்து வந்தவர்களில் 206 குடும் பங்கள் மட்டக்களப்பு மாவட்டத்தின் 9 முகாம்களில் தற்போதும் வசித்து வருவதா கவும் அவர்களுக்கு தமது திருச்சபையின் மூலமாக உலர் உணவுகளையும் மருத்துவ சேவைகளையும் வழங்கி வருவதாக மட் டக்களப்பு மாவட்ட துணை ஆயர் பொன் னையா ஜோசப் தெரிவித்தார்

அநேகமானவர்கள் மூதூர் சம்பூர் பிரதே சங்களில் இருந்து வந்தவர்கள் என்றும் அவர்களுக்குத்தேவையான உதவிகள் வழங்கப்பட்டதாகவும் அவர் குறிப்பிட் டார். இடம்பெயர்ந்து வந்தபோது அவர்க ளுக்கு சமைத்த உணவு வழங்கப்பட்ட தாகவும் அவர்கள் கொஞ்சம் கொஞ்சமாக மீளவும் அவர்கள் குடியேறியதை தொடர் ந்து அவர்களுக்கு தமது கிரிஸ்தவ நிறு வனம் உணவு, மருத்துவ உதவி, வாழ் வாதார மேம்பாட்டிற்கான உபகரணங்கள் போன்றவற்றை வழங்கி வருவதாகவும் அவர் கூறினார்.

> அசாதாரண சூழ்நிலைகளால் பாதிக்கப்பட்டுள்ள அழுத்தங் களுக்கு உள்ளாகி இருந்தவர் களுக்கு சமய ரீதியான பயிற்சிகள் வழங்கப்பட்ட தாகவும் அண்மையில் இடம் பெற்ற அசம்பாவிதங்கள் காரணமாக இடம்பெயர்ந்த மக்க ளுக்கு சமைத்த உணவுகள் மற் றும் உலர் உணவுகள் போன் றவை வழங்கியதாகவும் அவர் குறிப்பிட்டார்.

மீண்டும் வாழ்வோம் நிகழ்ச்சியானது கிழக்கு மாகாணத்தில் பிறை எப்.எம். வானொலி ஊடாக (FM 102 Mhz) ஞாயிற்றுக்கிழமைகளில் இரவு 9.45 முதல் 10.15 வரையும் புத்தளம் பிரதேசத்தில் அறூர் எப்.எம்.(FM 96.1 Mhz) வானொலி ஊடாக ஞாயிற்றுக்கிழமை மாலை 6.45 முதல் 7.15 வரையும் ஒலிபரப்பாகின்றது. எமது நிகழ்ச்சி ஒலிப்பதிவுகளை www.radio.voicesofpeace.lk என்ற இணையத்தளத்திலும் கேட்கலாம்.

உங்கள் எண்ணங்களை பகிர்ந்து கொள்ளுங்கள்

மீண்டும் வாழ்வோம்

பிறை எப்.எம் உங்கள் நிகழ்வை எண்ணங்களையும் உங்கள் பகுதிப்பிரச்சனைகளையும் எமக்கு எழுதி அனுப்புங்கள். அவசியமாக மீண்டும் வாழ்வோம் பகுதியில் பிரசுரிக்க வசதியிருக்கிறோம்.

த.பெ.இல. 1039 கொழும்பு
தொ.பே: 0774952242
www.lifelinesrilanka.com
info@lifelinesrilanka.com

சுவடுகள்

✱ அரசாங்க அதிபர்களின் தகவல்களின் அடிப்படை யில் திரட்டப்பட்ட IASC (117 ஆவது 06-13 மார்ச் மாதம்) அறிக்கையின் படி இலங்கையில் 72,368 குடும் பங்களைச் சேர்ந்த 262,887 பேர் அகதிகளாக இடம் பெயர்ந்த நிலையில் உள்ளனர்.

✱ அமெரிக்க செஞ்சிலுவைச் சங்கம் நாடளாவிய ரீதியில் உளவியல் முதலுதவிப்பயிற்சிகளை வழங்கி வருகின்றது.

இந்த திட்டத்தின் கீழ் 7000 பேர் உளவியல் முதலுதவி பயிற்சிகளை பெற்றுள்ளனர். இவர்களில் 1000 பேர் ஆசிரியர்கள் என்பது குறிப் பிடத்தக்கது.

இந்த பயிற்சி நடவடிக்கைகளுக்கு ஐந்து மில்லியன் டொலர் நிதி செலவிடப்பட்டதாக அறிவிக்கப்பட்டு ளளது

அசாதாரண சூழ்நிலைகளால் பாதிக்கப்படும் மக்க ளின் உளவியல் பிரச்சினைகளுக்கு உடனடியாக மேற் கொள்ளப்பட வேண்டிய முதலுதவிகள் குறித்து இந்த பயிற்சி நெறியின் போது அறிவுறுத்தப்பட்டுள்ளது

✱ தொடர்ச்சியாக பெய்து வரும் கடும் மழை காரணமாக 9 மாவட்டங்களை சேர்ந்த 172 909 பேர் பாதிக்கப்பட்டுள்ளதாக அளர்த்த முகாமைத்துவ மத்திய நிலையம் இம்மாதம் 12ஆம் திகதி வெளியிட்ட அறிக் கையில் குறிப்பிட்டுள்ளது

இவர்களில் 120,000 பேர் மட்டக்களப்பு மாவட் டத்தை சேர்ந்தவர்கள் என்றும் 50,000பேர் மன்னார் மாவட்டத்தைச் சேர்ந்தவர்கள் என்றும் தெரிவிக்கப்பட் டுள்ளது

பேசும் படம்

திருகோணமலையில் உப்புவெளி கிராம சேவகர் பிரிவைச் சேர்ந்த ஒரு பெண்ணணி யையே படத்தில் காண்கின்றீர்கள். இவர் வெள்ளத்தால் பாதிக்கப்படுவது இதுதான் முதல்தடவையல்ல. காலநிலை மாற்றத்தால் அடிக்கடி இன்னல்படும் இந்த மக்களின் வாழ்வில் விடியல் எப்போது?

மீண்டும் வாழ்வோம்

'மீண்டும் வாழ்வோம்' திட்டமானது இலங்கையின் அசாதாரண சூழ்நிலைகளி னால் இடம்பெயர்ந்து முகாம்களில் வாழும் மக்களுக்காகவும் மீள்குடியேறி உள்ளவர் களுக்காகவும் தகவல்களை வழங்கும் பரந்துபட்ட மனிதாபிமான செயல்த்திட் அமைப்புக்களின் ஒரு அங்கமாகும்.

த.பெ.இல. 1039 கொழும்பு
தொ.பே: 0774952242
மின்அஞ்சல்: info@lifelinesrilanka.com

வாழ்வின் வர்ணங்கள்

மட்டக்களப்பு நகரிலிருந்து கமார் 9 கி.மீ. தொலைவில் அமைந்து உள்ளது மஞ்சன் தொடுவாய் அகதி முகாம். இந்த முகாமிற்கு தலைவராக இருக்கும் 26 வயதான **மகிஷரனின்** சொந்த ஊர் மன்னிக்குடியேறியுப்பு. யுத்தத்தின் காரணமாக இடம்பெயர்ந்ததால் இளைஞர்கள் மத்தியில் அவர்களது சொந்த ஊரில் காணப்படும் கஷ்தீர சூழல் ஏனைய கிராமங்களில் கிடைப்பதில்லை என்பது இவரின் அங்கலாய்ப்பு ஆகும்.

எந்தவிதமான வசதிகளும் இன்றி கனரீதியாக பாதிப்படைந்து எந்த வழியில் போவது என்று தெரியாமல் திருமணம் முடித்தோ அல்லது பாடசாலையை விட்டோ செல்கின்றனர் என தெரிவிக்கின்றார். எல்லோரும் அடிப்படையில் மனநிலையில் பாதிப்படைந்து இருக்கின்றார்கள் என கூறும் இவர் தொழில் ரீதியாக சில மக்களுக்கு NGO க்களின் தொடர்புகளை செய்து சாமான்கள் எடுத்து கொடுத்தல் போன்ற உதவிகளை செய்யக் கூடியதாக இருக்கின்றது என்கின்றார். இலங்கையில் சமாதானம் மலர்ந்து எல்லா மக்களும் ஒற்றுமையாக வாழ வேண்டும். இலங்கையில் இவ்வாறான சூழ்நிலை உருவாக வேண்டும். என்பது இவரது பிரார்த்தனை ஆகும்.

இடம்பெயர்ந்த மக்களும் அவர்கள் எதிர்நோக்கும் உளவியல் பிரச்சினைகளும்

இரண்டு தசாப்தங்களுக்கு மேலாக நடைப்பெற்று வரும் யுத்தத்தின் காரண மாக அதிகமானவர்கள் இறந்தும் அதே போல் அங்கவீனர்கள் ஆகவும் உள்ளனர். பலர் உள நீதியாக பாதிக்கப்பட்டுள்ளனர்.

உள நீதியாக பாதிக்கப்பட்டவர்களின் நிலை குறித்தும் அவர்களுக்கான சிகிச்சை முறைகள் குறித்தும் அறிந்து கொள்ளும் நோக்கில் வவுனியா மாவட்ட வைத்திய சாலையில் மனநோயாளர் பிரிவில் வைத் தியராக கடமையாற்றும் உமாகரன் அவர் களை சந்தித்தோம்.

வவுனியா மாவட்டம் இடம்பெயர்ந்த மக்களையும் மீளக் குடிமர்ந்த மக்களை யும் கொண்டுள்ள ஒரு மாவட்டம். இங் குள்ள மக்களில் எத்தகையவர்கள் மன நல சிகிச்சைகளுக்காக வைத்தியர்களை அணு கின்றார்கள் என்று அவரிடம் கேட்டபோது கடந்த வருடத்தில் மட்டும் புதிதாக பதிவு செய்யப்பட்ட நோயாளர்களின் எண்ணி க்கை 600ஐ தாண்டிவிட்டதாக அதிர்ச்சி தகவலை அவர் வெளியிட்டார்.

இதைவிட ஏற்கனவே பதிவு செய்யப் பட்டு தொடர்ச்சியாக சிகிச்சைக்காக வந்து கொண்டு இருப்பவர்கள் என்னிக்கையும் ஏறக்குறைய 1000ற்கு மேற்பட்டதாக இருக்கின்றது.

எனவே வவுனியா மாவட்டத்தில் இந்த ஆண்டு ஏறத்தாள 1600 நோயாளர்களுக் க்கு சிகிச்சை வழங்கி அவர்களை பராம ரிக்க வேண்டி இருப்பதாக அவர் கூறி னார்.

இந்த ஆண்டின் ஆரம்பத்தில் ஏறத்தாள 50 பதிய நோயாளர்கள் மன நல சிகிச் சைக்கென பதிவுசெய்யப்பட்டு இருக்கின் றார்கள்.



ஒரு ஆண்டில் 600 நோயாளர்கள் புதிதாக பதிவு செய்யப்படுவது என்பது வவுனியா மருத்துவமனையில் குறிப்பாக மனநோயாளர் பிரிவில் ஒரு அசாதாரண நிலைமை

ஒரு ஆண்டில் 600 நோயாளர்கள் புதி தாக பதிவு செய்யப்படுவது என்பது வவு னியா மருத்துவ மனையில் குறிப்பாக மனநோயாளர் பிரிவில் ஒரு அசாதாரண நிலைமை என்று அவர் கவலை தெரி வித்தார்.

இந்த அசாதாரண நிலைமைக்கான மிக வெளிப்படையான காரணம் யுத்தம் மற் றும் அதனுடைய விளைவுகளும் தான் என்றும் அவர் குறிப்பிட்டார்.

யுத்தத்தின் விளைவுகள் என்று சொல் லப்படும் போது நெருக்கமான உறவு களின் இழப்புகள்,இப்பெயர்வுகள் சொத்துக்கள் மற்றும் பொருட்களின் இழப்புகள் சொந்த வாழ்வித்தை விட்டு நீங்கி வேறு ஒரு வாழ்விடத்திலே வாழ வேண்டி ஏற்படல் என பலவகைப்படு வதாக அவர் கூறினார்.

இதேவேளை தொடரும் யுத்தம் காரண மாக ஏற்படும் நெருக்கடிகள் மற்றும் அச்ச உணர்வுகள் என்பனவும் மன அழுத் தங்கள் ஏற்பட காரணமாகின்றது.

தீவிரமான மனநோய்கள் மற்றும் மித மான மனநோய்கள் என மனநோய்களை இரண்டு பிரிவாக பிரித்து இருக்கின்றனர்.

இடம்பெயர்ந்த மக்கள் மத்தியிலும் நலன்புரி நிலையங்களில் வாழும் மக்கள் மத்தியிலும் மிதமான மன நோய்த் தாக்கம் அதிகம் காணப்படுவதாக அவர் கூறினார்.

முல்லைத்தீவு மாவட்டம் கிளிநொச்சி மாவட்டம் வவுனியா மாவட்டம் மன்னர் மாவட்டம் என வடக்கில் உள்ள நான்கு மாவட்டங்களை சேர்ந்த ஆறு இலட்சம் மக்களுக்கும் வவுனியா மாவட்ட வைத் தியசாலையே உளவள சிகிச்சைகளை வழங்கி வருகின்றது.

செத்த பின்தான் நடக்கும்

கேட்டதெல்லாம்
கிடைக்குமென்றும்
கெடுப்பவர்கள்
இல்லையென்றும்
நாட்டமுள்ள
செயலெல்லாம்
நல்லாய் வருமென்றும்
தோட்டம் தரவுகள்
சொத்தாக வருமென்றும்
சாந்திரி நாகமணி என்
சாதகத்தில் சொன்னார்கள்
போனதெல்லாம்
திரும்பி வரும்
போதும் வழி நல்லதாகும்
தான கருமம் செய்யும்
தனவானாய் ஆவீர்கள்
மானம் பெரிதாக
மகிமைக் செயல்
நடக்குமென்றும்
தேனான வாழ்வு
தீத்திக்கு மென்றும்
சொன்னார்
அங்கர் மா கேட்டு
அழகுகு கடைக்குட்டி
ஆட்டமா புட்டும்
ஆணமும் தா என்று

போட்டு ஆட்டுகிறான்
பொல்லாத ஆத்தமகன்
பொங்கலும்
சித்திரையும்
போன மீன் எனக்கு
வேணாம்
தங்கச்சி சட்டை
போல
தரணு மெனக்கென்று
எங்கள் ஆத்த மகள்
எம்மை வாட்டுகிறாள்
கெத்தரிசு முப்பது
கொள்ளி
கட்டிருப்பதைந்து
அத்த மத்தியானத்தில்
அங்கு மிங்கும் தீரிந்து
அரை வயிறை நிரப்ப
ஆடுகின்ற
ஆட்டமெல்லாம்
ஆடி முடிந்து நிமம்
ஆறடி சென்றதுமே
சோத்டரின் குறிப்பில்
சொன்ன படி நடக்கும்

தம்பிஎஸ்வில் தயா

இடம்பெயர்ந்த மக்களுக்கான உணவு விநியோகம்

உணவு மனிதனின் தேவைகளில் அதி முக்கியமானது. இடம்பெயர்ந்து வாழும் போது தன் குழந்தைகளுக்கு அடுத்த வேளை உணவு கொடுக்க முடியுமா என்ற ஏக்கம் இடம்பெயர்ந்த மக்களை பெரிதும் வாட்டிவருகின்றது.

இலங்கையிலும் ஆயிரக்கணக் கில் பலர் இடம்பெயர்ந்துள்ளனர். இவர்களில் பலர் அகதி முகாம்க ளில் வாழ்கின்றனர்.

இலங்கையில் பல பிரதேசங்க ளில் அரசாங்கத்தினால் நிவாரண உதவிகள் வழங்கப்பட்டு வருகின் றது.

இப்பிரதேசங்கள் தொடர்பாக தக வல்களை பெற்றுக் கொள்ளும் நோக்கில் மீள் குடியேற்ற அனர்த்த நிவாரண அமைச்சின் செயலாளர் ஏ.கே.எம்.ராசிக தொடர்பு கொண்டு கேட்டோம்.

புத்தளம் மாவட்டத்தில் உள்ள வர்களுக்கு என அந்தப்பிரதேச செய லகத்தின் மூலம் உலர் உணவுகள் வழங்கப்படுவதாகவும் அநுராத புரம் மற்றும் பொறநறுவை போன்ற மாவட்டங்களில் உள்ள இடம்பெயர்ந்தவர்களுக்கான உணவு, பல நோக்குக் கூட்டுறவு சங்கங்கள் மூலம் வழங்கப்படுவதாகவும் அவர் கூறி னார்.

இந்த வருடம் முதல் அமைச்சினால் விலை மனுக்கள் கோரப்பட்டு கொள்வனவு செய்யும்ம் உணவுப் பொருட்கள் வவு னியா மூல்லைத்தீவு கிளிநொச்சி யாழ்ப் பாணம் மன்னார் போன்ற பிரதேசங்க ளுக்கு அந்த அரசாங்க அதிபர்கள் மூலமாக அனுப்பி வைக்கப்படுவதாக அவர் குறிப் பிட்டார்.

அகதி முகாம்களில் உள்ளவர்கள் எவ்வ எவு பெறுமதியான நிவாரணத்திற்கு உரித் துடையவர்கள் என்பது மக்கள் மத்தியில் தோன்றும் முக்கிய சந்தேகம். இது குறித்து வடக்கிலிருந்து இடம்பெயர்ந்த முல்லிம் களுக்கான செயலகத்தின் ஆணையாளர் வை.எம்.நவாரிடம் வினவினோம். 5 பேர் உள்ள குடும்பங்களுக்கு 1500 ரூபா பெறு மதியான பொருட்களும் 4 பேர் உள்ள குடும்பங்களுக்கு 1008 ரூபா பெறுமதியான பொருட்களும் 3 பேர் உள்ள குடும்பங்களுக்கு 804 ரூபா பெறுமதியான பொருட்களும் வழங்கப்படுகின்றது. இரண்டு பேர் உள்ள குடும்பங்களுக்கு 636 ரூபா பெறுமதியான பொருட்களும் ஒருவ ராக இருந்தால் 336 ரூபா பெறுமதியான பொருட்களும் வழங்கப்பட்டு வருவதாக அவர் கூறினார்.

அரசாங்கம் இடம்பெயர்ந்த மக்களுக்கு பெருந்தொகையான பணத்தை ஒதுக்கியுள் ளது. முகாம்களில் உள்ளவர்களின் உணவுத் தேவைகளை பூர்தி செய்வதற்கு செலவிடப் படும் நிதி தொடர்பில் கருத்து வெளியிட்ட அனர்த்த நிவாரண அமைச்சின் செயலாளர் ஏ.கே.எம். ராசிக். இதுவரை 1890 மில்லி யன் ரூபா பெறுமதியான உலர் உணவை தாங்கள் வழங்கி உள்ளதாகவும் குறிப்பாக ஜனவரி மாதத்தில் 67 மில்லியன் ரூபா நிதி

யும்' பெப்ரவரி மாதத்தில் 227 மில்லியன் ரூபா நிதியும் இதற்கென செலவிடப்பட்ட தாக தெரிவித்தார்.

அரசாங்கம் மட்டுமன்றி உலக உணவு ஸ்தாபனம் போன்ற அரச சார்பற்ற அமைப் புக்களும் உணவு நிவாரண பணியில் ஈடு பட்டுள்ளன.

அந்த வகையில் வவுனியாவில் செயற் பட்டு வரும் டி.ஆர்.சி. என்ற அரச சார் பற்ற அமைப்பின் செயற்பாட்டாளர் தியா கரன் அவரை காரணம் கருதி இடம் பெயர் ந்தவர்களுக்கு வழங்கும் உணவுப் பொதி தொடர்பில் கருத்து வெளியிட்டார்

ஒரு உணவுப் பொதியில் உள்ளடக்கப் பட்டுள்ள உணவுப் பொருட்கள் ஒரு குடும்பத்திற்கு ஒரு கிழமைக்கு போது மானது. இதில் தேங்காய் எண்னெய் தரத்தில் அடைக்கப்பட்ட பதப்படுத்தப் பட்ட மீன், மிளகாய்த்தூள், பெருஞ்சீரகம், நற்சீரகம், தேயிலை, சோயா, உப்பு, கடுகு, பயறு, நெத்தலி கருவாடு, உள்ளி, புளி போன்ற உணவுப் பதார்த்தங்கள் அடங்குவதாக தியாகரன் குறிப்பிட்டார்.

தவிர்க்க முடியாத காரணத்தினால் சிலர் நிவாரணம் வழங்கப்படும் பட்டியலில் சேர்க்கப்படாமல் இருக்கலாம். அவ்வாறா னவர்கள் எவ்வாறு தமது உலர் உணவு நிவாரணத்தை பெற்றுக் கொள்ளலாம் என் பது தொடர்பில் வடக்கிலிருந்து இடம் பெயர்ந்த முஸ்லிம் செயலகத்தின் ஆணை யாளர் வை.எம்.நவாரி. அவர்கூறும் வினவிய போது 'அவர்கள் தாங்கள் இடம் பெயர்ந்தவர்கள் என்ற அத்தாட்சிகளை உறுதிப்படுத்தி அவர்களது குடும்ப விபரங்கள் தொடர்பான விடயங்களையும் தமது முகாம்களுக்கு பொறுப்பான அதிகாரிகளுக்கு ஊடாக அனுப்பி வைக்கும் போது அவற்றை பரிசீலித்து வழங்கக்கூடியதாக இருக்கும் என்று கூறினார்.

5 பேர் உள்ள குடும்பங்களுக்கு 1500 ரூபா பெறுமதியான பொருட்களும் 4 பேர் உள்ள குடும்பங்களுக்கு 1008 ரூபா பெறுமதியான பொருட்களும் 3 பேர் உள்ள குடும்பங்களுக்கு 804 ரூபா பெறுமதியான பொருட்களும் வழங்கப்படுகின்றன. இரண்டு பேர் உள்ள குடும்பங்களுக்கு 636 ரூபா பெறுமதியான பொருட்களும் ஒருவராக இருந்தால் 336 ரூபா பெறுமதியான பொருட்களும் வழங்கப்படுவதாக அவர் கூறினார்

அறிவோம் தெரிவோம்

பெண்கள் உரிமைகள் தொடர்பாக ஐ.நா.சங்கத்தின் மனித உரிமைகள் சாசனம் முக்கிய விடயங்களை முன்வைத்துள்ளது. பெண்கள் உடல்ரீதியான தனித்துவம், பாதுகாப்பு மற்றும் உடல் ரீதியான தீங்கை தடுத்தல் ஆகியவற்றுக்கான உரிமையை கொண்டுள்ளனர். தகவல் மற்றும் தீர்மானம் எடுப்பதற்கான உரிமை, உணவு, நீர் மற்றும் மலசலகூட வசதிகளை பெறுவதற்கான உரிமையும் பெண்களுக்கு உண்டு. கல்வி மற்றும் சுகாதாரத்திற்கான உரிமை வீடமைப்பு, காணி மற்றும் நிலத்திற்கான உரிமை, வாழ்வாதாரம், தகவலை அறிவதற்கான உரிமை என பெண்களுக்கான அடிப்படை உரிமைகள் வகைப்படுத்தப்பட் டுள்ளன.

பெண்கள் ஆண்களின் கட்டுப்பாட்டில் வளர்கின்றபடி யினாலேயே அவர்களுடைய உலகம் மிகவும் சிறியதாக இருக்கின்றது. யுத்தத்தினாலல் பாதிக்கப்பட்ட சமூகங்களை எடுத்து பார்த்தீர்கள் என்றால் அங்கு பெண்கள் உழைப்பாளர்களை இழந்த குடும்பங்களில் இரட்டைச்சுமைகளை தாங்க வேண்டியவர்களாக வருகின்றனர். வெளியில் போனால் அங்குள்ள சமூக பிரச்சினைகள். யுத்தம் என்று பல பிரச்சினைகள். இராணுவ மயமாக்களின் பின் பெண்களுக்குரிய பாதுகாப்பு வட சிழக்கில் மட்டுமல்ல தென்பகுதியில் கூட மிக குறைந்து காணப்படுகிறது.

2010ஆம் ஆண்டை இலக்காக கொண்டு சிறுவர் நல திட்டங்களில் ஈடுபடும் Save the Children

சார்வதேச அரச சார்பற்ற நிறுவனங்களில் ஒன்றே Save the Children ஆகும். உள்ளூர் மற்றும் இடம்பெயர்ந்த சிறுவர்களின் கல்வியை மேம்படுத்துவதை நோக்கமாக கொள்ளு இவ் வமைப்பு செயல்பட்டு வருகின்றது. நாட்டின் 09 மாவட்டங்களில் இதன் செயற்பாடுகள் காணப்படுகின்றன. அந்த வகை யில் திருகோணமலை மாவட்டத் தில் Save the Children இன் பிரதி முகாமையாளராக கடமை யாற்றும் **மார்க் பீட்சன்** அவர் களை நேர்கண்ட போது அவர் கூறிய விடயங்கள் இங்கு தரப் படுகின்றது.

சிறுவர்களது உரிமையை பாதுகாப்பதற்கு எவ்வாறான நடவடிக்கைகள் எடுக்கப்படு கின்றது?

ஏறத்தாழ 2000ஆம் ஆண்டி லிருந்து சிறுவர் உரிமைகள் பற் றிய விழிப்புணர்வு ஒன்று மாவட்ட ரீதியாக நடாத்தப் பட்டு வருகின்றது. இதன் நோக் கம் மக்கள் சிறுவர் உரிமை களை எவ்வாறு விளங்கி வைத் திருக்கின்றார்கள் என்பதும் அது சம்மந்தமான அறிவு அவர்களுக்கு எவ்வளவு தூரம் உள்ளது என்பதை அறிய விளை வதும் ஆகும். அதை அடிப்படை யாக வைத்துக் கொண்டு சிறுவர் உரிமைகள் தொடர்பான பல விழிப்புணர்வு செயல்திட்டங்கள் நடாத்தப்படுகின்றது.

அத்தோடு சிறுவர் உரி மைகள் பற்றி கதைக்கும் போது சிறுவர்களின் பொறுப்பு கட்டாயமாக வெளிப்படுத்தப்படுகின்றது. இதற்கு காரணம் விழிப் புணர்வு மற்றும் சிறுவர் பொறுப்பு ஆகிய இவை இரண்டும் இணைந்து போக வேண்டிய ஒரு விடயம் ஆகும். கழகங்களுக்கூடாக நிகழ்சிகள் என்பன நடாத்தப்பட்டு அவர்களின் திறமைகள் மூலமாக அவர் களின் பிரச்சனைகள் பெற்றோ ருக்கோ அல்லது பெரியோ ருக்கோ வெளிக்கொணர தேவை யான வழிமுறைகளை அமைத்துக் கொடுக்கப்படுகின்றது.

தற்போது சிறுவர்களுக்கு மத்தியில் காணக்கூடிய பிரச்சி னைகள் எவ்வாறானதாக இருக் கின்றது?

திருகோணமலை மாவட்டத்தை பொறுத்த மட்டில், இது யுத்தத்தி னால் பாதிக்கப்பட்ட ஒரு மாவட் டம் ஆதலால், முக்கிய பிரச்சினை யாக இடம்பெயர்ந்த சிறுவர்களை தான் முன்வைக்க வேண்டியுள் ளது. இரண்டாவதாக பிள்ளைக ளின் கல்வி, ஏனைய மாவட்டங் களுடன் ஒப்பிட்டு பார்க்கும்



மார்க் பீட்சன்

பொழுது கல்விக்கு இருக்கக் கூடிய வசதிகள் திருகோணமலை மாவட்டத்தில் பெரிய அளவிலான குறைபாடுகளை கொண்டதாக இருக்கின்றது. அத்தோடு சிறுவர் உரிமையை பாதுகாப்பதற்கு தேவையான அறிவும் அது தொடர்பான வளங்களும் குறைவாக இருப்பதும் ஒரு முக்கிய பிரச்சினையாக காணப் படுகின்றது.

அவ்வாறு குறைபாடுகள் காணப்படும் பொழுது அவர் களின் கல்வி நிலையை உயர்த்த நீங்கள் எவ்வாறான நடவடிக் கைகளை எடுக்கின்றீர்கள்?

கல்வி விடயத்தில் சிறுவர் பாது காப்பு அம்சம் இரண்டு விடயங்க ளில் வேலை செய்கின்றது. ஒன்று அடிப்படைக் கல்வி இரண்டா வது சிறுபாராயக் கல்வி பாட சாலைகளில் காண்கின்ற முக்கிய பிரச்சினைகளில் ஒன்று வளங்கள் குறைவாக உள்ளது.

பாடசாலையில் உள்ள சில பிரச்சனைகளுக்கு இன்னொரு நபர் வந்து தீர்வு காணும் வரையோ அல்லது மேலிடத்தில் இருந்து உத்தரவு வரும் வரையோ இருக்காமல் பாடசாலையில் இருக் கின்ற மற்ற வளங்க ளைப் பயன்படுத்தி பிரச்சினையை தீர்க்க வேண்டும். உதாரணமாக, பாட சாலை அபிவிருத்தி சபை. இவ்வாறான குழுக்களின் செயற் பாடுகளை இயங்க வைப்பது பாட சாலைக்கு மிக முக்கிய மாகும். அத்தோடு பாடசாலைக்கு தேவையான வளங்களையும் கொடுக்கும் போது ஆசிரியர்களுக்கு தேவையான பயிற்சிகள், அவர்களது ஏனைய குறைகளை பார்த்து அதற்கான உதவிகள் செய்யப்படுகின்றது. இது அடிப்படைக் கல்வி பற் றிய கருக்கமான விடயம். இங்கு முதன்முதலில் ஒரு இலகுவான பிரிவு ஆரம் பிக்கப் பட்டுள்ளது. இந்த இலகுவான பிரிவு நன் றாக இயங்குவதற்கு நாங் களும் ஒரு காரணம்.

பாடசாலையில் உள்ள சில பிரச்சினைகளுக்கு இன்னொரு நபர் வந்து தீர்வு காணும் வரையோ அல்லது மேலிடத்தில் இருந்து உத்தரவு வரும் வரையோ இருக்காமல் பாடசாலையில் இருக்கின்ற மற்ற வளங்களை பயன்படுத்தி பிரச்சினையை தீர்க்க வேண்டும்

எதிர்காலத்தில் இந்த நிறுவனம் மூலமாக எவ்வாறான நட வடிக்கைகள் மேற் கொள்ளப்பட விருக்கின்றன?

Save the children 3 வருட காலத்திட்டத்திற்குள்ளான வேலைதிட்டங்களை உள்ளடக்கி. 2010ஆம் ஆண்டை இலக்காக கொண்டு அந்த இலக்கை நோக் கிய செயற்பாடுகளை முன்னெ டுத்து செல்கின்றது.

மீள்தரும் வாழ்வொன்று (LifeLine) செயல்திட்டமானது USAID இனால் நிதியளிக்கப்பட்டு Internews Network இனால் நடைமுறைப்படுத்தப்படுகின்றது
INTERNEWS
USAID
FROM THE AMERICAN PEOPLE

தகவல் பெட்டி

இலங்கையில் மனிதாபிமான மற்றும் அபிவிருத்தி உதவிக்கான வழிகாட்டல் கோட்பாடுகள்

சர்வதேச மனித உரிமைகள் சட்டம், சர்வதேச மனிதாபிமானச் சட்டம், இலங்கைச் சட்டம் மற்றும் பிரமோகிக்கப்பட்ட கூடிய அனைத்து சர்வதேச நியமங்களின் வழிகாட்டல்களின்படி, இலங்கையில் மனிதாபிமான மற்றும் அபிவிருத்தி உதவிகளை செயற்திறனுடன் அமும் படுத்துவதற்கு ஏதுவாக பின்வரும் வழிகாட்டல் கோட்பாடுகளை கீழே குறிப்பிடப்பட்ட கையொப்பிட்டோர் மீள் உறுதிப்படுத்துகின்றனர். இதன் கீழ் கையொப் பிட்டோர் தங்களது பணியாளர்கள் மற்றும் அவர்களது நடவடிக்கை அமும்படுத்தும் பங்களாளர்கள் என்பேர் (சர்வதேச/உள்ளூர் அரசாசார் பற்ற ஸ்தாபனங்கள், ஐ.நா, செஞ்சிலுவைச் சங்கம் போன்றன) பின்வரும் 10 கோட்பாடுகளை நடைமுறைச் சட்டங்களின் கீழ் இயன்றளவு கடைப்பிடிக்க பெரும் முயற்சி செய்வர்.

1. **மனிதாபிமான மற்றும் அபிவிருத்தி உதவியின் குறிக்கோள்:** இலங்கை மக்களின் வாழ்க்கைத்தரத்தை மேம்படுத்து வதில், பங்களிப்பதற்கு நாங்கள் ஒன்றிணைந்து பணியாற்றுகின்றோம். எங்கள் உதவிகள் மக்களின் வேதனைகளை தீக்குதல், வறுமையை ஒழித் தல், இலங்கையின் மோதல் நிலைமைகளுக்கு அமைதியான தீர்வொன் றிற்கு ஆதரவளித்தல் உட்பட சமூகங்கள் தன்னிறைவை அடைய உதவுதல் போன்றவை குறித்துக் கவனம் செலுத்துகின்றன.
2. **பாரபட்சமின்மை:** இடவமைவு, இனம், பால்நிலை, சமூக அந்தஸ் த்து அல்லது மதம் என்பவற்றைக் கருதாது இனங்காணப்பட்ட தேவை களின் அடிப்படையில் மட்டுமே நாங்கள் உதவிகளை வழங்குகின்றோம்.
3. **பக்கச்சார்பின்மை:** எங்களது உதவிகள், வழங்கல்கள், வாகனங்கள், வசதிகள் அல்லது உபகரணங்கள் என்பன எந்தவொரு இராணுவ, அரசி யல் அல்லது பிரிவினை நோக்கங்களுக்காக உபயோகிக்கப்படுவதனை ஏற்றுக் கொள்ளாதுடன் நாங்கள் பக்கச்சார்பின்மையுடன் இருப்போம்.
4. **மனித கௌரவத்தை மதித்தல்:** சர்வதேச மனிதாபிமானச் சட்டம் மற்றும் சர்வதேச மனித உரிமைகள் சட்டம் என்பவற்றுக்கான மதிப்பளித்தலை நாங்கள் வேண்டுகின்றோம். நாங்கள் உள்ளூர்ச் சமூகங்கள் வெளிப்படுத்திய விருப்புகளின் விளைவாக பணியாற்றுவதுடன் மக்களது கௌரவம், அவர்களது கலாசாரம், மதம் மற்றும் பாரம்பரியங்கள் மதிக்கின்றோம்.
5. **ஒளிவு மறைவின்மை மற்றும் பொறுப்புக் கூறல்:** நாங்கள் உதவி செய்ய நாடுபவர்களுக்கு நாங்கள் பொறுப்புக்கூற வேண்டியவர்களா வோம். எங்களது உதவிகள் ஒளிவு மறைவு இல்லாதவை என்பதை நாங் கள் உறுதிப்படுத்துவோம். அபிவிருத்தி அல்லது மனிதாபிமான உதவிக ளுக்கான வழங்கல்கள் அல்லது கடன்களுக்கான ஜாமீன் ஏதேனும், களவு அல்லது துஷ்பிரயோகங்களை அனுமதிக்கமாட்டோம்.
6. **நிலைத்து நிற்றல் மற்றும் தயார்படுத்தல்:** உள்ளூர் நிலைமைகளுக்கு ஏற்ற வகையில் எங்களது செயற்பாடுகளை அமைத்துக் கொள்வதுடன் உள்ளூரில் கிடைக்கும் வளங்களை அதிகரிப்பதையும் இலக்காகக் கொண்டுள்ளோம். சிவில் சமூகங்கள், வர்த்தக சமூகங்கள், உள்ளூர் அதிகார சபைகள் போன்ற உள்ளூர் அமைப்புக்கள், தற்போதைய தேவைகள் குறித்து கவனம் செலுத்த மற்றும் எதிர்கால அவரர நிலைமை களைத் தவிர்க்க அல்லது எதிர்கொள்ளத் தயாராவதற்கு வலுவூட்டு கிறோம்.
7. **ஆலோசனை மற்றும் பங்குபற்றல்:** நாங்கள், சமூகங்களை அவர்களது நன்மைகளுக்காக அமும்படுத்தும் நிகழ்சித்திட்டங்களை வடிவமைக்க, திட்டமிட, முகாமைத்துவம் செய்ய, நடைமுறைப்படுத்த மற்றும் மதிப்பீடு செய்வதில் அவர்களை ஈடுபடுத்து வதற்கு நாடுகிறோம்.
8. **ஒருங்கிணைத்தல்:** நாங்கள், எங்களது செயற்பாடுகளை அரசாங் கம் மற்றும் தொடர்புடைய அனைத்து அக்கறையாளர்களுடனும் ஒவ் வொரு மட்டத்திலும் ஒருங்கிணைக்கின்றோம்.
9. **வழிவகைகள்:** உதவி தேவைப்படும் அனைத்து மக்களுக்குமான அடிப்படைத் தேவையாக கட்டுப்பாடுகளற்ற வழிவகைகளை நாம் வெள் ளுக் கொள்கின்றோம். மனிதாபிமான பொருட்கள் மற்றும் சேவைகளைப் பெறுவதில் சம்பந்தப்பட்ட அதிகாரிகள் ஊழியர்களுக்கான அதிகாரத்தை விரைவில் வழங்குவதையும் கங்கப்படுகுதியிலிருந்து வெளிக்கொண்டு வரு வதையும் நாம் எதிர் பார்க்கின்றோம்.
10. **பாதுகாப்பு, பத்திரமும்:** சம்பந்தப்பட்ட அனைத்துக் கட்சிகளிட மும் முகவர் ஸ்தாபனங்கள் மற்றும் அவர்களது ஊழியர்களின் பாதுகாப்பு மற்றும் சுதந்திரத்தை தற்காத்து பாதுகாப்பை மேம்படுத்துமாறு வேண்டுகிறோம். ஊழியர்கள் வன்முறை, கடத்தப்படல், தொந்தரவு அல்லது அச்சுறுத்தல்களுக்கு ஆளாகுவதை நாம் அனுமதிக்கமாட்டோம். எங்களது பணிகளுடன் தொடர்புகளற்ற ஆட்கள் அல்லது பொருட்களை போக்குவரத்து செய்வதற்கு எங்களது வாகனங்கள் உபயோகப்படுத்தப் படல் கூடாது.

எங்களது செயற்பாடுகள் சர்வதேச அரச சார்பற்ற ஸ்தாபனங்களின் கோட்பாடுகள் மற்றும் செஞ்சிலுவைச் சங்கம்- செம்பிறை இயக்கங்களது ஒழுக்கக் கோவையுடன் நிலையானதாக இருப்பதை நாம் உறுதிப் படுத்த விரும்புகிறோம். மேலதிக தகவல்களுக்கு தயவுசெய்து http://www.ifrc.org/publicat/conduct/code.asp உடன் தொடர்பை ஏற்படுத்தவும். இவ்வழிகாட்டல் கோட்பாடுகள் ஒரு சர்வதேச ஒப்பந்தமோ அல்லது சட்டவலுவான ஆவணமோ அல்ல.

இப்பத்திரிகை எக்ஸ்பிரஸ் நியூஸ்பேப்பர்ஸ் (சிலோன்) லிமிட்டெட்டாரால் கொழும்பு-14, கிராண்ட்பாஸ் வீதி, 185 ஆம் இலக்கத்தில் 2008ஆம் ஆண்டு மார்ச் மாதம் 30ஆம் திகதி குமரிற்றுக்கிழமை அச்சிட்டு வெளியிடப்பட்டது.